21–11–2020

# <u>சென்னை மெட்ரோ இரயில் திட்டம்–கட்டம்–II ன் சிறப்பம்சங்கள்</u>

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் கட்டம்–I திட்டம், 45 கி.மீ நீளத்தில் இரண்டு வழித்தடங்களை உள்ளடக்கியது. வண்ணாரப்பேட்டை முதல் விமான நிலையம் வரையிலான நீல வழித்தடம், புரட்சித் தலைவர் டாக்டர். எம்.ஜி. இராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ முதல் பரங்கிமலை வரையிலான பச்சை வழித்தடம், மொத்தம் 32 மெட்ரோ நிலையங்களுடன் கட்டி முடிக்கப்பட்டு தற்போது இயக்கப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே நகரத்தின் இரயில்வே முனையங்கள், பேருந்து முனையங்கள் மற்றும் விமான நிலையம் ஆகியவை முதற்கட்டத்திலேயே இணைக்கப்பட்டுள்ளது.

கட்டம்–I ன் நீட்டிப்புத் திட்டம் வண்ணாரப்பேட்டை முதல் திருவொற்றியூர் (விம்கோ நகர்) வரை 9.051 கி.மீ நீளத்தில் 8 மெட்ரோ நிலையங்களுடன் (2 சுரங்கப்பாதை மற்றும் 6 உயர்த்தப்பட்ட மெட்ரோ நிலையங்கள்) நகரத்தின் மத்திய வணிக மாவட்டப் பகுதியை, வடக்கு பகுதியுடன் இணைக்கிறது. இத்திட்டம் ஜனவரி 2021 இறுதியில் போக்குவரத்துக்கு திறக்கப்படும் என திட்டமிடப்பட்டுள்ளது.

விரைவான, பாதுகாப்பான, திறன்மிக்க மற்றும் நிலையான பொதுப் போக்குவரத்து அமைப்பு தேவை என்பதை கருத்தில் கொண்டு, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் கட்டம்–II திட்டம் 118.9 கி.மீ நீளத்தில் மூன்று வழித்தடங்களுடன் (வழித்தடம்–3, 4 மற்றும் 5) ரூ. 61,843 கோடி செலவு மதிப்பீட்டில் மத்திய அரசு, தமிழ்நாடு அரசு, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை, ஆசிய மேம்பாட்டு வங்கி, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி மற்றும் புதிய மேம்பாட்டு வங்கி ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

- **வழித்தடம் 3 : மாதவரம் முதல் சிட்காட் வரை – 45.8** கி.மீ நீளத்திலான இந்த வடக்கு தெற்கு வழித்தடம், முக்கிய இடங்களான தகவல் தொழில்நுட்ப வழித்தடம், அடையாறு, மயிலாப்பூர் மற்றும் புரசைவாக்கம் ஆகிய இடங்களை இணைப்பதுடன் 50 மெட்ரோ நிலையங்களை (20 உயர்த்தப்பட்ட மெட்ரோ நிலையங்கள் மற்றும் 30 சுரங்கப்பாதை மெட்ரோ நிலையங்கள்) உள்ளடக்கியது.
- **வழித்தடம் 4 : கலங்கரை விளக்கம் முதல் பூந்தமல்லி புறவழிச்சாலை வரை** – 26.1 கி.மீ நீளத்திலான இந்த கிழக்கு மேற்கு வழித்தடம், நகரத்தின் வணிகப் பகுதிகளான நந்தனம், தியாகராய நகர், வடபழனி, வளசரவாக்கம், போரூர் மற்றும் பூந்தமல்லியை இணைப்பதுடன், மொத்தம் 30 மெட்ரோ நிலையங்களை (18 உயர்த்தப்பட்ட மெட்ரோ நிலையங்கள் மற்றும் 12 சுரங்கப்பாதை மெட்ரோ நிலையங்கள்) உள்ளடக்கியது.
- **வழித்தடம் 5 : மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரை** – 47.0 கி.மீ நீளத்திலான இந்த சுற்று வட்ட வழித்தடம், முக்கிய இடங்களான வில்லிவாக்கம், அண்ணா நகர், கோயம்பேடு, விருகம்பாக்கம், இராமாபுரம், மடிப்பாக்கம் மற்றும் மேடவாக்கம் ஆகியவற்றை இணைப்பதுடன் மொத்தம் 48 மெட்ரோ நிலையங்களை (42 உயர்த்தப்பட்ட மெட்ரோ நிலையங்கள் மற்றும் 6 சுரங்கப்பாதை மெட்ரோ நிலையங்கள்) உள்ளடக்கியது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் கட்டம் –II திட்டத்தில் இரட்டை சுரங்கங்கள் தோண்டுவதற்காக மொத்தம் 23 சுரங்கம் தோண்டும் இயந்திரங்களைப் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் கட்டம் –II திட்டம் இந்தியாவில் உள்ள மெட்ரோ இரயில் திட்டங்களிலேயே, ஒரே தடவையில் செயல்படுத்தப்படவுள்ள தனிப்பட்ட மிகப்பெரிய மெட்ரோ இரயில் திட்டமாகும்.

2026ல் இந்த மூன்று வழித்தடங்களும் முடிவுற்ற பின்னர், சென்னை நகரம் 173 கி.மீ. நீளத்திலான மெட்ரோ இரயில் வழித்தடப்பகுதிகளுடன், நாள் ஒன்றுக்கு 25 இலட்சம் பயணிகளை ஏற்றி செல்லும் வகையிலும், இது பொது போக்குவரத்து பயணங்களில் 25 சதவீத அளவிலும் இருக்குமென கணக்கிடப்பட்டுள்ளது. இதனால் முதலீடுகள் மற்றும் பொருளாதார செயல்பாடுகளுக்கு உகந்த உலகத்தரம் வாய்ந்த நகரமாக அமையும்.

பன்முக போக்குவரத்து ஒருங்கிணைப்பின் ஒரு பகுதியாக, கட்டம் –IIன் கட்டமைப்பு ஏனைய பொதுப் போக்குவரத்துகளான புறநகர் இரயில், பெருந்திரள் துரிதப் போக்குவரத்து அமைப்பு, நகரப் பேருந்து சேவை போன்றவற்றுடன் 21 வெவ்வேறு இடங்களில், சிரமங்கள் இன்றியும் எளிதாக மாறும் வகையில் ஒருங்கிணைக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டம், மக்களின் வாழ்க்கை வசதியை மேம்படுத்துவது என்ற அரசின் முக்கிய குறிக்கோளை நிறைவேற்றும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.